CFM|L|81

81

# குருதிக்கொடை மூலம் உயிர்காப்போம்

## வாருங்கள்



**குருதி...**

- உடற்றொழிற்பாடுகளின் ஒழுங்கான நிலவுகைக்குக் குருதிச் சுற்றோட்டம் இன்றியமையாதது.

- உடல் நிறையில் 8 சதவீத அளவில் இரத்தம் காணப்படுகின்றது. (உதாரண மாக 60 kg நிறையுடைய ஒருவரில் 4.8 லீற்றர் குருதி காணப்படும்).

- இரத்ததானத்தின்போது 450 மில்லிலீற்றர் அளவான (1/10) குருதியே தானமாக வழங்கப்படுகின்றது.

- குருதியில் உள்ள கூறுகள் குறித்த வாழ்நாட்களின் பின்னர் இயல்பாகவே உடலினுள் அழிவடைந்து விடுகின்றன. இவற்றிற்குப் பதிலாக புதிய கூறுகள் மீண்டும் உற்பத்தியாக்கப்படுகின்றன.

- ஆகவே, மேற்படி குறித்த கால இடை வெளியில் அழிவடையும் இரத்தத்தின் ஒரு சிறிய பகுதியையே தானத்தின் போது வழங்குகின்றீர்கள்.

## குருதிமாற்றீடு தேவைப்படும் சந்தர்ப்பங்கள்

- அதிக குருதி இழப்பு
  - வீதி விபத்துக்கள்
  - சத்திர சிகிச்சை
  - மகப்பேறு
- குருதிச்சோகை
- தலசீமியா
- டெங்கு
- குருதி உறையா நோய்
- தீவிர எரி காயங்கள்
- புற்றுநோய்

## குருதி வழங்குபவர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்

- வயது 18 - 60
- உடல்நிறை ≥ 50kg
- ஆரோக்கியமானவர்
- குருதிமூலம் பரவும் நோய்களிற்கு ஆளாகாதவர் (ஈரல் அழற்சி, எயிட்ஸ்)

குருதிக்கு மாற்றீடு
செயற்கையாக எதுவுமில்லை.

**குருதி வழங்கிய பின்பு ...**

- விசேட உணவு ஏதும் தேவையில்லை

- குருதி வழங்குபவரினதும் குருதி பெறுப வரினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படும்.

- நான்கு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் இரத்ததானம் செய்யலாம்.

**ஒழுங்கான தொடர்ச்சியான தவணை முறையில் குருதித்தானம் செய்யப்படு வதனால் ஏற்படும் நன்மைகள்:**

- குருதி வழங்கலின் பின்னர் நுண் குருதிச் சுற்றோட்டத்தில் ஏற்படும் வினைத்திற னால் உடலில் புத்துணர்ச்சி ஏற்படு கின்றது.

- மருத்துவ ரீதியான உடற்பரிசோதனை களும், குருதி மாதிரியில் செய்யப்படும் இரத்தப் பரிசோதனைகளும் உடல்நலம் தொடர்பான பொதுவான நிலையை இலவசமாக அறிய உதவுகின்றன.

- குருதிக்கூறுகளை உற்பத்தி செய்யும் என்புமச்சைகளின் தொழிற்பாடு புத் துயிர்ப்பு அடைகின்றன.

➢ கொலஸ்திரோல் அதிகரித்து ஏற்படும் மாரடைப்பிற்கான சாத்தியங்கள் ஒப்பீட் டளவில் குறைவதாக ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன.

➢ உங்களிற்கோ உங்களின் உடன்பிறந் தோருக்கோ குருதி மாற்றீடு அவசியமான நேரத்தில் இலகுவாகவும் விரைவாகவும் இரத்த வங்கியூடாகப் பெற்றுக்கொள்ள லாம்.

## இரத்ததானம் நடைபெறும் இடங்கள்

➢ இரத்த வங்கி.

யாழ் போதனா வைத்தியசாலை,

➢ நடமாடும் இரத்ததான முகாம்கள்

- ☞ பாடசாலைகள்
- ☞ கழகங்கள்
- ☞ அலுவலகங்கள்
- ☞ சனசமூக நிலையங்கள்
- ☞ கோயில்கள்,



வெளியீடு:

இரத்தவங்கி

யாழ். போதனா வைத்தியசாலை.

கல்விசார் வெளியீட்டு அலகு.

சமுதாய மருத்துவத்துறை.

யாழ். மருத்துவபீடம்.



அனுசரணை:

# Hatton National Bank

## எமது சேவைகள்

- ❖ சிக்கன வட்டி வீதங்களில் இலகு கடன் வசதிகள்
- ❖ கடன் அட்டைகள் மற்றும் வரவு அட்டைகள் (Credit / debit cards)
- ❖ குறைந்த வட்டி வீதத்தில் அதிகூடிய அடகு முற்பணம்.
- ❖ வெளிநாட்டுப் பணப்பரிமாற்றல் வசதிகள்
- ❖ சிறுவர் சேமிப்புகளுக்கு அதிகூடிய வட்டியும் விசேட பரிசில்களும்

அத்துடன்,

**HNB பத்தும் விமன 2010**

இலங்கையின் மாபெரும் சேமிப்புச் சீட்டிழுப்பில் இன்றே இணையுங்கள்.

Hatton National Bank
இல.05, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
Tel: 0212220006, 0212220007

(2006/FM/66) Harikanan, Jaffna.